III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, THIRUVALLUR AT POONAMALLEE

O.S.34/2014

Deposition of witness for the Defendant/DW2
Respondent solemnly by Tr. A. Nagarajan Assistant
in accordance with the provision of Act I for 1873 on 23-12-2020

| | | |
|---|---|---|
| Name | :Dhinakar | Caste : |
| Father's/Husband's Name | :Govindasamy | Calling : |
| Age | : | Religion : |
| Village | : | Taluk: |

பிரமாண பத்திரத்தின் தொடர்ச்சியாக முதல் விசாரணை/-

என்னுடைய முதல் விசாரணைக்காக பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்திருக்கிறேன். 01/04/1980 தேதியிட்ட கிரைய ரசீதின் சான்றிட்ட நகல் பி.சா.ஆ.32. என்னுடைய தந்தையார் பெயரில் உள்ள அசல் பட்டா பி.சா.ஆ.33. என்னுடைய தாயார், சகோதரர் மற்றும் என்னுடைய பெயரில் உள்ள கூட்டு பட்டா பி.சா.ஆ.34. 08/09/1977 தேதியில் எனது தந்தை வருமான வரி செலுத்தியதற்கான சான்று பி.சா.ஆ.35. 1981-1982 வருடத்திற்கான வருமான வரி கணக்கீட்டு பட்டியல் மற்றும் வருமான வரி செலுத்திய ரசீது பி.சா.ஆ.36. 1996-1997 வருடத்திற்கான வருமான வரி கணக்கீட்டு படிவம் பி.சா.ஆ.37. 08/09/1977 தேதியில் எனது பெரியப்பா திரு. ராமமூர்த்தி அவர்கள் வருமான வரி செலுத்தியதற்கான சான்று பி.சா.ஆ.38. 08/09/1977 தேதியில் எனது பெரியப்பா திரு தாமோதரன் அவர்கள் வருமான வரி செலுத்தியதற்கான சான்று பி.சா.ஆ.39. 25/10/1997 தேதியில் எனது பெரியம்மா சுலோச்சனா க/பெ தாமோதரன் பெயரில் தாக்கல் செய்யப்பட்ட வருமான வரி படிவம் பி.சா.ஆ.40. 25/10/1997 தேதியில் கோபால் த/பெ தாமோதரன் பெயரில் தாக்கல் செய்யப்பட்ட வருமான வரி படிவம் பி.சா.ஆ.41. 25/10/1997 தேதியில் எனது பெரியம்மா விஜயா க/பெ ராமமூர்த்தி பெயரில் தாக்கல் செய்யப்பட்ட வருமான வரி படிவம் பி.சா.ஆ.42. 25/10/1997 தேதியில் சரஸ்வதி த/பெ ராமமூர்த்தி பெயரில் தாக்கல் செய்யப்பட்ட வருமான வரி படிவம் பி.சா.ஆ.43. 25/10/1997 தேதியில் ராஜலட்சுமி த/பெ ராமமூர்த்தி பெயரில் தாக்கல் செய்யப்பட்ட வருமான

வரி படிவம் பி.சா.ஆ.44. எங்களுடைய அசல் குடும்ப அட்டை பி.சா.ஆ.45.

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-** நான் பி.டெக்., எம்பி.ஏ படித்திருக்கிறேன். என்னுடைய பிறந்த தேதி 04/05/1986 ஆகும். நான் ஏற்கனவே தாக்கல் செய்த இடைநிலை மனு எண் 2/2020 என்ற மனுவில் தற்போது தாக்கல் செய்துள்ள பி.சா.ஆ.32 முதல் பி.சா.ஆ.45 வரை உள்ளவை அந்த மனு தாக்கல் செய்வதற்கு ஒரு வார காலத்திற்கு முன்பு தான் எனக்கு கிடைத்ததாக குறிப்பிட்டிருக்கிறேன் என்றால் சரிதான். மேற்சொன்ன மனுவை 19/11/2020 தேதியில் தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். அந்த மனுவிற்கான பிரமாண பத்திரத்தை 09/11/2020 தேதியில் தயார் செய்திருக்கிறேன் என்றால் அதில் தேதி திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது. வாதிகளுக்கு கொடுக்கப்பட்ட மேற்சொன்ன மனுவின் பிரமாண பத்திரத்தின் நகலில் தேதி 09/03/2020 என்று குறிப்பிட்டிருப்பதாக சொன்னால் சரிதான். 09/03/2020 தேதியில் தயார் செய்யப்பட்ட பிரமாண பத்திரம் பின்னிட்டு தேதி மட்டும் 09/11/2020 என்று திருத்தம் செய்திருப்பதாக சொன்னால் தவறாகும். மேற்சொன்ன மனுவில் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் என்னுடைய தந்தையாரால் கையாளப்பட்ட ஆவணங்கள் என்றும், அவை மிக பழமையான ஆவணங்கள் என்றும் குறிப்பிட்டிருக்கிறேன் என்றால் சரிதான். மேற்சொன்ன இடை நிலை மனு எண் 2/2020 மற்றும் அதன் பிரமாண பத்திரம் ஆகியவை வா.சா.ஆ.53 ஆகும். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் மேற்சொன்ன ஆவணங்களை தாக்கல் செய்வதற்கு ஒரு வார காலத்திற்கு முன்பு தான் அந்த ஆவணங்களை பற்றி தெரியும் என்று குறிப்பிட்டிருப்பதாக சொன்னால் சரிதான். எங்களுடைய வழக்கின்படி இந்த வழக்குச் சொத்துக்கள் அனைத்தும் கூட்டு குடும்ப சொத்துக்கள் கிடையாது என்று கூறியிருக்கிறோம் என்று சொன்னால் சரிதான். எங்களுடைய எதிர் வழக்குரையின் படி தாவா 'அ' பட்டியலில் கண்ட 1 முதல் 6 இன சொத்துக்கள் மற்றும் 12 முதல் 14 வரையான இனச் சொத்துக்களில் வாதிகளுக்கு 1/4 பங்கு இருப்பதாக ஒப்புக் கொண்டிருக்கிறோம் என்றால் சரிதான். மேலும் தாவா 'அ' பட்டியலில் கண்ட 8 முதல் 11 மற்றும்16 இன சொத்துக்களில் வாதிகளுக்கு 1/4 பங்கு இருப்பதாக ஒப்புக் கொண்டிருக்கிறோம் என்றால் சரிதான். தாவா 'அ' பட்டியலில் கண்ட 15 வது இன சொத்தில் வாதிகளுக்கு 1/5 பங்கு இருப்பதாக ஒப்புக் கொண்டிருக்கிறோம்

என்றால் சரிதான். தாவா 'அ' பட்டியலில் கண்ட 7வது இன சொத்து என்னுடைய பாட்டானாருடைய அண்ணன் ஆதிநாராயணசாமி நாயுடுவிற்கு சொந்தமானது என்பதால் அதில் வாதிகளுக்கும் எங்களுக்கும் எவ்வித உரிமையும் இல்லை. தாவா 'அ' பட்டியலில் கண்ட 7வது இன சொத்தில் வாதிகளுக்கு உரிமை இல்லை என்பதை காட்டும் விதமாக நாங்கள் ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா 'டி' பட்டியலில் கண்ட 1, 3, 4 மற்றும் 5 இன சொத்துக்களில் வாதிகளுக்கு 1/5 பாகம் இருப்பதாக எங்களுடைய எதிர் வழக்குரையில் குறிப்பிட்டிருக்கிறோம் என்றால் சரிதான். மேலும் தாவா 'ஈ' பட்டியலில் கண்ட வேலப்பன்சாவடி சொத்தில் அடி மனையில் 1/5 பாகமும், கட்டிடத்தில் 1/4 பாகமும் வாதிகளுக்கு இருப்பதாக எங்களுடைய எதிர் வழக்குரையில் குறிப்பிட்டிருக்கிறோம் என்றால் சரிதான். தாவா 'எப்' பட்டியலில் கண்ட ஷெனாய் நகர் சொத்தில் 1/4 பாகம் வாதிகளுக்கு இருப்பதாக எங்களுடைய எதிர் வழக்குரையில் குறிப்பிட்டிருக்கிறோம் என்றால் சரிதான். பி.சா.ஆ.1 ஆவணத்தில் என்னுடைய தகப்பனாரின் கையெழுத்து இருக்கிறது. பி.சா.ஆ.1 ஆவணம் உண்மையானதாகும். அது 01/04/1979 ல் ஏற்பட்டிருக்கிறது என்றால் சரிதான். அந்த ஆவணம் பதிவு செய்யப்படாத ஒரு பங்குதாரர் ஆவணம் என்றால் சரிதான். பி.சா.ஆ.1 ஆவணத்தின் படி சுப்பையா நாயுடுவிற்கு வயது 60, பக்தவட்சலுவிற்கு வயது 27, கோவிந்தசாமிக்கு வயது 25, விஜயாவிற்கு வயது 27, சுலோச்சனாவிற்கு வயது 27 என்று குறிப்பிடப்பட்டிருப்பதாக சொன்னால் சரிதான். பி.சா.ஆ.32 பதிவு செய்யப்பட்ட தேதியில் நான் பிறக்கவில்லை என்றால் சரிதான். அதனால் பி.சா.ஆ.32 ஆவணம் பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான்.